No. C. 15/2023 12-09-2023

# திருவிவிலிய ஞாயிறு - 24.09.2023

"உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு (எசா 54:2) - இறைவார்த்தையை நம் வாழ்வில் அடையாளம் கண்டு பதில் அளிக்க"

**இறை இயேசுவில் அன்பிற்கினியவர்களே!**

வாழ்வு மாற்றத்திற்கான ஆற்றலாய் விளங்கும் வார்த்தையாம் இறைவனின் அன்பும், உடனிருப்பும் என்றும் உங்களோடு இருப்பதாக!

இறைவனோடு பேசத் தவிக்கும் ஒவ்வோர் இதயத்தின் திறவுகோல் இறைவார்த்தையே. ஏனெனில், இறைவார்த்தை தவிர்க்க முடியாத வலிமை. நம் இதய ஆழத்தைத் தொடும் இறைவார்த்தை, நமது வாழ்வு மாற்றத்திற்கான ஆற்றல் மூலம். ஆகவே, இறைவார்த்தைக்கான இடம் தாராளமாய் நம் வாழ்வில் கொடுக்கப்பட வேண்டும் எனும் நோக்கில் "உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு" (எசா 54:2) எனும் கருப்பொருளில் நாம் இந்த ஆண்டிற்கான திருவிவிலிய ஞாயிறை செப்டம்பர் 24ஆம் நாள் சிறப்பிக்க இருக்கிறோம்.

## திருவிவிலியம் வாழ்வின் நூல்

மானுட விடுதலைக் கூறுகளை உள்ளடக்கி, அடிமைச் சிந்தனைகளை வேரறுத்து, சமூக மாற்றத்திற்கு வழி வகுக்கும் வீரிய நூல் திருவிவிலியம். எழுதப்பட்ட காலம் கடந்து நிகழ்கால வாழ்வுக்கும், எதிர்கால வாழ்வுக்கும் வலு சேர்ப்பதால் திருவிவிலியம் எக்காலத்திற்கும் இறைமக்களின் வாழ்வு நூல் எனக் கொண்டாடப்படுகிறது. திருவிவிலியம் தாங்கிவரும் கடவுளின் வார்த்தையை வரலாற்றின் நிகழ்வுகளுக்கும், எதார்த்ததிற்கும் அப்பாற்பட்டது எனப் பிரித்துப் பார்க்க முடியாது. வரலாற்றில் வாழும் மானிடரைக் காப்பதால் திருவிவிலியம் மானுடத்தின் வாழ்வு நூல். அடிமைகளாக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களின் அவலநிலையைக் கண்ட கடவுள், அவர்களின் விடுதலை வாழ்வுக்கான விதையை வார்த்தையாக மோசேயின் இதயத்தில் பதித்தார். தயக்க உணர்வும், அச்ச உணர்வும் மோசேயை ஆட்கொண்டாலும் தன்னுடைய உறுதியூட்டும் உடனிருப்பு வார்த்தையால் இஸ்ரயேலின் விடுதலை வாழ்வை வார்த்தையால் உறுதிப்படுத்தினார் இறைவன்.

## திருவிவிலியத்திற்கான இடம் நம் வாழ்வில்

"திருவிவிலியத்தைக் கையில் ஏந்துங்கள்; திருவிவிலியம் நீங்கள் செல்லவேண்டிய திசை காட்டியாய்த் திகழ்வதாக" எனும் குரல் நம் வாழ்வில் ஓங்கி ஒலிக்க வேண்டும். நாம் பயணிக்க வேண்டிய நலமான பாதையைச் சுட்டிக்காட்டி, நமது வாழ்வின் பொருளைக் கண்டுணரத் தூண்டும் இறைவார்த்தைக்கான இடத்தை நாம் உறுதிப்படுத்துவோம். திருவிவிலியம் கடந்த காலத்தினின்று வரும் வார்த்தை மட்டுமல்ல; அது

வாழும் காலத்திற்குப் பொருந்துகின்ற உயிருள்ள வார்த்தை என்பதை நமது செயல்பாடுகளால் வெளிப்படுத்துவோம்.

## இறைவார்த்தையின் பதில்மொழி நாம்

இறைவார்த்தையால் உருவாக்கப்பட்டு (தொநூ 1:27-28) இறைவார்த்தையாக ஒளிர்விக்கப்பட்ட நாம், நமது செயல்பாடுகளால் பதில் மொழியாக மாற அழைக்கப்பட்டிருக்கிறோம். பன்முகத் தன்மையின் குரல்வளை நெரிக்கப்பட்டு, மாற்றுக் கருத்து வெளியை ஒடுக்கி, ஒற்றைக் கலாச்சாரத் திணிப்பால் மானுடச் சமுதாயத்திற்கெதிரான கட்டவிழ்ப்புகள் அரங்கேறும் இக்காலச் சூழலில், இறைவார்த்தையால் உந்தித்தள்ளப்பட்டு இறையாட்சியின் குரலாய் பதில் சொல்லவேண்டியது நம் பொறுப்பு எனும் இறைவாக்கினர்களின் இதய உணர்வுகள் நம்மை ஆட்கொள்ள வேண்டும். சமூகத்தில் அரங்கேறும் அவலங்களுக்கு இறைவார்த்தை ஒளியில் நாம் தீர்வு காண முன்வருவோம்.

## திருவிவிலியப் பணியில் நாம்

1. காலம் விடுக்கும் அறைகூவலுக்கு இறைவார்த்தையின் ஒளியில் பதில் சொல்ல திருவிவிலியப் பணிக்குழுக்களை பங்குகளில் உருவாக்குவோம்.
2. மறைமாவட்ட திருவிவிலியப் பணிக்குழு ஒருங்கிணைக்கும் தொடர் திருவிவிலிய வினாடி-வினாவில் பங்கேற்போரை திருவிவிலியப் பணிக்குழுவாக ஒன்றிணைப்போம்.
3. திருவிவிலிய தொடர் வகுப்புகளை பங்குகளில் தொடங்குவோம்.
4. திருவிவிலியப் பணிக்குழு முன்னெடுக்கவிருக்கும் திருவிவிலியத் தொடர் பயிற்சியில் பங்கேற்போம்.
5. இந்திய மற்றும் தமிழக திருவிவிலியப் பணிக்குழுவால் நடத்தப்படும் அஞ்சல்வழி மற்றும் இணையவழி திருவிவிலிய வகுப்புகளில் பங்கேற்போம்.
6. திருவிவிலிய வாரத்தை முன்னிட்டு மறைமாவட்ட திருவிவிலியப் பணிக்குழு முன்னெடுக்கும் சிறப்பு நிகழ்வுகளில் பங்கேற்போம்.
7. 18.09.2023 முதல் 24.09.2023 வரையிலான திருவிவிலிய வார திருவழிபாட்டை பொருளுணர்ந்து கொண்டாடுவோம்.

வார்த்தையாம் இறைவனின் அருளும், இறைவார்த்தையை வாழ்வாக்கிய அன்னை மரியாவின் பரிந்துரையும் என்றும் உங்களோடு இருப்பதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**